செய்தி வெளியீடு எண் : 1231 நாள் : 18.08.2024

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
# திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின்
# திராவிட மாடல் ஆட்சி ஆண்டு முழுதும் கொண்டாடிய
# முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின்
# நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 22-5-2023 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினைச் சிறப்பாக நடத்திட ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

அதன் தொடர்ச்சியாக தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் 4.7.2023, 26.7.2023, 3.8.2023, 16.10.2023, 1.11.2023 ஆகிய தேதிகளில் 5 ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

அரசாணை (நிலை) எண்.98 தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (பொருட்காட்சி மற்றும் விழா)த் துறை, நாள்: 22.6.2023-ன்படி, மாண்புமிகு அமைச்சர்கள் தலைமையில் 12 சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

## முக்கிய நிகழ்வுகள்

மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் இளைஞர் நலன் மற்றும் விளையாத்து மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் அண்ணல் காந்தியடிகளின் பேரன் திரு.கோபால கிருஷ்ண காந்தி அவர்களால் 2.6.2023 அன்று, கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு "கலைஞர் 100" இலச்சினை வெளியிடப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலைஞர் நூற்றாண்டு நினைவு மருத்துவமனையை 15.6.2023 அன்று கிண்டி கிங் ஆராய்ச்சி நிறுவன வளாகத்தில். திறந்து வைத்தார்கள்.

கலைஞர் நூற்றாண்டு நூலகம் 15.7.2023 அன்று மதுரையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு மாரத்தான்-2023 போட்டியில் 73,206 நபர்கள் கலந்துகொண்டு சாதனை படைத்தனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் "www.kalaignar100.com" என்ற கலைஞர் நூற்றாண்டு விழா இணையதளம் 7.8.2023 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கிளாம்பாக்கத்தில் திறந்து வைக்கப்பட்டது.

கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம் முதலமைச்சர் மாண்புமிகு தமிழ்நாடு அவர்களால் 24.1.2024 அலங்கா நல்லூரில் அன்று திறந்து வைக்கப்பட்டது

